

ஈரோடு கோட்டை ஈஸ்வரன் கோவில் 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகம் தொடர்பான கல்வெட்டு பலகையை தமிழகவீட்டு வசதி அமைச்சர் எஸ்.முத்துசாமி திறந்து வைத்தார். உடன் அறங்காவலர் குழு முன்னாள் தலைவர் செ. செல்வம்( எ) பழனியப்பன் கவுன்சிலர்புவனேஸ்வரி பாலசுந்தரம் சுப்பிரமணியம் மணிகண்டன் கேபிள் பிரகாஷ் செயல் அலுவலர் ஜெ.லதா உட்பட பலர் உள்ளனர்.

## நீலகிரி மாவட்ட பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 3 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.16,199 மதிப்பிலான திறன் பேசிகள்

### கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு வழங்கினார்

ஊட்டி,ஜூலை.15-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு , பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா, முதியோர், விதவை, கல்வி உதவி தொகை, வங்கி கடன், சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 201 கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும்; மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள்; உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கலெக்டர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.



மேலும், இக்கூட்டத்தில், கலெக்டர் , மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், 3 பயனாளிகளுக்கு ரூ.48,597- தலா ரூ.16,199%-) மதிப்பில் திறன் பேசிகளையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்தில் முன்கள பணியாளர்களாக பணியாற்ற தேர்வு செய்யப்பட்டுள்ள 3 மாற்றுத்திறனாளி பயனாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு பணி நியமன ஆணைகளையும், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில், 3 புதிய பொலிரோ வாகனங்களின் சாவிகளை வாகன ஓட்டுநர்களிடம் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், சமூக பாதுகாப்பு திட்டம் (தனித்துணை ஆட்சியர்) ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள்; வாணி (வளர்ச்சி பிரிவு), கண்ணன் (கணக்குகள்), மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் குப்புராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டத்தில்

## உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முதற்கட்டமாக 146 முகாம்களில் நடைபெறுகிறது: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தகவல்

ஊட்டி,ஜூலை.15-

நீலகிரி மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில், கலெக்டர் லட்சுமதி பவ்யா தண்ணீரு தலைமையில், உங்களுடன் ஸ்டாலின் திட்டம் தொடர்பான செய்தியாளர் கூட்டம் நடைபெற்றது.இக்கூட்டத்தில் கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவங்கப்படும் என அறிவித்திருத்தார்கள். அதன்படி அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரக பகுதிகளில் 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டம் துவங்கப்பட இருக்கிறது. நாளைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் , கடலூர் மாவட்டம் சிதம்பரம் நகராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டத்தினை தொடங்கி வைக்கிறார்கள்.

அதனை தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் தொடர்ந்து நடைபெற இருக்கிறது. முதற்கட்டமாக, நமது மாவட்டத்திலும் நாளை 15.07.2025 முதல் 14.08.2025 வரை நகராட்சி, ஊராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்கள் நடைபெறவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நமது மாவட்டத்தில் 5 நகராட்சிகள், 10 பேரூராட்சிகள், 35 கிராம ஊராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் உள்ள பொதுமக்களும் பயன்பெறும் வகையில், நகர்ப்புற பகுதிகளில் 65 முகாம்களும், ஊரக பகுதியில் 81 முகாம்களும் என மொத்தம் 146 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. நாளைய தினம் நமது மாவட்டத்தில் துவங்கும் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டமானது குன்னூர் ஊராட்சி ஒன்றியம் வண்டிசோலை ஊராட்சிக்குட்பட்ட பகுதிக்கான முகாமானது சோலாடா மட்டம் என்என்டி கட்டடத்திலும், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம் கடின



மாலா ஊராட்சிக்குட்பட்ட பகுதிக்கான முகாமானது

சோலூர் மட்டம் தேனாடு ஊராட்சி அலுவலகத்திலும், குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 1 மற்றும் 2 க்கான முகாமானது பாலகிளாவா ஜெயின் மண்டபத்திலும், கோத்தகிரி நகராட்சிக்குட்பட்ட வார்டு 1, 2 மற்றும் 3ற்க்கான முகாமானது தாந்தநாடு சமுதாய கூடத்திலும், அதிகரட்டி பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 1,8,9,10,11,12,14,15,16,17 மற்றும் 18ற்க்கான முகாம் பிக்கோல் சமுதாய கூடத்திலும், ஜெகதளா பேரூராட்சிக்குட்பட்ட வார்டு 5,6,7,8,9,10,11 மற்றும் 12ற்க்கான முகாம் ஜெகதளா சமுதாய கூடத்திலும் நடைபெறவுள்ளது. ஏற்கனவே தன்னார்வலர்கள் மூலம் வீடுவீடாக சென்று விண்ணப்ப படிவங்கள் மற்றும் கையேடுகள் வழங்கப்பட்டுள்ளது. நாளை நடைபெறும் முகாம்களில் கலந்து கொள்ளும் வகையில் சுமார் 9,000 வீடுகளுக்கு விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 67 முகாம்களும், இரண்டாம் கட்டமாக 16.08.2025 முதல் 14.09.2025 வரை 42 முகாம்களும், மூன்றாம் கட்டமாக 15.09.2025 முதல் 14.10.2025 வரை 37 முகாம்களும் நடைபெறுகிறது. எனவே பொதுமக்கள் அந்தந்த ஊர் பகுதியில் நடைபெறும் முகாம்களில் கலந்து கொண்டு பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், இம்முகாமில் ஆதிதிராவிடர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, எரிசக்தி துறை போன்ற பல்வேறு துறைகளின் சார்பில், பெயர் மாற்றம், புது மின் இணைப்பு வசதி, ஆதார் பெயர் மாற்றம், குடிநீர் வசதி, சொத்து வரி உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் சேவைகள் வழங்கப்படவுள்ளது. கிராமப்புறங்களில் நடைபெறும் முகாம்களில் 15 துறைகள் மூலமாகவும், நகர்புற முகாம்களில் 13 துறைகள் மூலமாகவும் பல்வேறு வகையான 45 சேவைகள் வழங்கப்படவுள்ளது. மேலும், இம்முகாமில் பொதுமக்கள் நலன் கருதி ஆம்புலன்ஸ் சேவை மற்றும் மருத்துவ முகாமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் காவல்துறை மூலம் சேவை மையமும் அமைக்கப்படவுள்ளது. ஒவ்வொரு முகாம்களிலும்; கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் வகையில் விண்ணப்பங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் முகாம்களுக்கு வரும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்கள் பயன்படுத்தும் வகையில் தன்னார்வலர்கள் மற்றும் சக்கர நாற்காலி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முகாமானது காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறுகிறது. முகாம்களில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

## குட்கா, பிளாஸ்டிக் கவர்கள் பயன்பாட்டை தடுக்க சோதனை பணிகளை தீவிரப்படுத்த ஆணையர் அறிவுறுத்தல்

ஈரோடு, ஜூலை.15–

ஈரோடு மாநகராட்சியில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் பிளாஸ்டிக் கவர்கள் பயன்பாட்டை தடுக்கும் வகையில், சோதனை பணிகளை தீவிரப்படுத்த வேண்டும் என அலுவலர்களுக்கு ஆணையர் அர்பித் ஜெயின் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்கள் விற்பனை மற்றும் பிளாஸ்டிக் கவர்கள் பயன்பாட்டை தடுக்கவும், சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், மாவட்ட கலெக்டர் கந்தசாமி அறிவுறுத்தியிருந்தார்.

அதன் பேரில், மாவட்டம் முழுவதும் சிறப்புக் குழு அமைக்கப்பட்டு, கடந்த ஒரு வாரமாக தீவிர சோதனை நடத்தப்பட்டு வரப்படுகிறது.

குறிப்பாக, ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக பிளாஸ்டிக் கவர்கள் பறிமுதல் செய்யப்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகிறது.

இந்நிலையில், ஈரோடு மாநகராட்சியில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா மற்றும் பிளாஸ்டிக் கவர்கள் பயன்பாட்டை தடுக்கும் வகையில், சோதனை பணிகளை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என அலுவலர்களுக்கு ஆணையர் அர்பித் ஜெயின் அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:-

ஈரோடு மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தலின் பேரில், மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பயன்பாடு குறித்து தினசரி கண்காணிக்கப்பட்டு வருகிறது. மாநகராட்சி பகுதிகளில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் கவர்கள் முற்றிலும் ஒழிக்கப்படும். பிளாஸ்டிக் கவர்களில் உணவு மற்றும் இதர பொருட்கள் வாங்குவதை தவிர்த்து, மாநகரத்தை தூய்மையாக பராமரிக்கவும், சுற்றுச்சூழல் மாசுபடுவதை தவிர்க்கவும், பொதுமக்கள் மாநகராட்சி நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

அதேபோன்று, மளிகை, பெட்டிக்கடை, பேக்கரிகளில் குட்கா பொருட்கள் இருப்பது தெரிய வந்தால், கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆணையர் அறிவுறுத்தியிருக்கிறார்.

எனவே, ஆணையரின் அறிவுறுத்தலின் பேரில் மேலும் சோதனை தீவிரப்படுத்த உள்ளோம். இவ்வாறு மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்


## ஈரோட்டில் செல்வ விநாயகர், மகா மாரியம்மன் ஆலய கும்பாபிஷேக விழா

ஈரோடு ஜூலை 15

ஈரோடு மாநகராட்சி பெரிய சேமூர் கிராமம் பாவாய் தண்ணீர் பந்தல் பாளையம் பகுதியில் அமைந்துள்ளது ஸ்ரீ செல்வ விநாயகர் ஸ்ரீ மகா மாரியம்மன் திருக்கோயில்கள் திருக்கோயில் கும்பாபிஷேக விழா கடந்த சனிக்கிழமை தொடங்கியது முன்னதாககாலை காவிரி ஆற்றில் இருந்து தீர்த்தம் எடுத்துவரப்பட்டு கணபதி ஹோமம் நவக்கிரக ஹோமம் செய்யப்பட்டது



தொடர்ந்து சாமிகளுக்கு சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டு தீபாராதனைகள் நடைபெற்றது ஞாயிற்றுக்கிழமை கோபுரங்களுக்கு கலசங்கள் வைக்கப்பட்டது இதைத்தொடர்ந்து நேற்று திங்கட்கிழமை காலை இரண்டாம் கால பூஜைகள் செய்யப்பட்டு கலசங்கள் புறப்பாடு நடைபெற்றது பின் காலை 9 மணிக்கு செல்வ விநாயகர் மகா மாரியம்மன் மற்றும் பரிவார தேவதைகளுக்கு கும்பாபிஷேகம் மற்றும் தச தரிசனம் தசதானம் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது கும்பாபிஷேகத்தை தொடர்ந்து பொதுமக்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது விழாவை யொட்டி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது விழா ஏற்பாடுகளை குழு தலைவர் தர்மகர்த்தா பி. லோகநாதன் பாவாய் தண்ணீர் பந்தல் பாளையம் பெரிய சேமூர் கிராம மக்கள் செய்திருந்தனர். விழாவில். அமைச்சர் முத்துசாமி திருப்பூர் எம்எல்ஏ செல்வராஜ், சந்திரகுமார் எம்எல்ஏ திமுக மாநகர செயலாளர் சுப்பிரமணிதுணை மேயர் செல்வராஜ் மற்றும் பொதுமக்கள் இதில் திரளாக கலந்து கொண்டனர்



ஈரோடு மாநகராட்சி கமிஷனர் அர்பித் ஜெயினிடம் மாற்றுத்திறனாளிகளுக்கான மாமன்ற உறுப்பினராக நியமனம் செய்வதற்கான விண்ணப்பத்தை சமூக ஆர்வலர் சம்பத்தநகர் ரவீந்திரன் வழங்கினார். அருகில் சட்ட ஆலோசகர் கவின் உள்ளார்

ஈரோடு மாவட்டத்தில்

## பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 20 பேருக்கு ரூ.10.45 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள்

### கலெக்டர் ச.கந்தசாமி வழங்கினார்

ஈரோடு,ஜூலை.15-

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் கலெக்டர் ச.கந்தசாமி, தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, விதவை உதவித்தொகை, கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, கலைஞரின் கனவு இல்லம், இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 322 மனுக்கள் வரப்பெற்றன.



பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை கலெக்டர் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

மேலும், முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மக்கள் குறைதீர்;க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், இக்கூட்டத்தில் கலெக்டர் தொழிலாளர் நலத்துறையின் சமூக பாதுகாப்புத்திட்டம் சார்பில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித்திட்டத்தின் கீழ் சொந்தமாக நிலம் வைத்துள்ள 1 தொழிலாளருக்கு வீடு கட்டிக்கொள்ள ரூ.4.00 இலட்சம் நிதியுதவி ஆணை, பதிவுபெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித்திட்டத்தின் கீழ் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் 3 பயனாளிகளுக்கு வீடு ஒதுக்கீட்டு ஆணைகள், விபத்து மரணமடைந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு ரூ.2.05 இலட்சம் நிவாரண நிதியுதவி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 5 நபர்களுக்கு தலா ரூ.6,700/- வீதம் ரூ.33,500 /-மதிப்பில் விலையில்லா சலவைப் பெட்டிகள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரப்பினர் நலத்துறை சார்பில் 10 நபர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டைகள் என மொத்தம் 20 நபர்களுக்கு ரூ.10.45 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்த குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி. காஞ்சன் சௌதரி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ராஜகோபால், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் நூர்ஜஹான் உட்பட அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தது நமக்கு பெருமை நாட்டை சுத்தமாக வைப்பது நமது கடமை

## கோவை சாய் சிட்டி ரோட்டரி சங்க 34 வது பதவியேற்பு விழா




ஊட்டி , ஜூலை 15.

கோவை சாய் சிட்டி ரோட்டரி சங்க 34 வது பதவியேற்பு விழா கோவை அவினாசி சாலையில் உள்ள கிரேன்ட் ரீஜன்ட் அரங்கில் நடைபெற்றது. சர்வதேச ரோட்டரி 3203 மாவட்ட ஆளுநர் டாக்டர் சுரேஷ் பாபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு புதிய நிர்வாகிகளுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். கோவை சாய் சிட்டி ரோட்டரி சங்கத்தின் புதிய தலைவராக ஆல்துரை, செயலாளராக அனந்த கிருஷ்ணன், பொருளாளராக ஷியாம் ஷரன் பதவி ஏற்றனர். ரோட்டரி சங்க தலைவராக புதிதாக பதவியேற்ற ஆல்துரை தனது ஏற்புரையில் பேசியதாவது,

சர்வதேச ரோட்டரி சங்கத்தின் கொள்கைக்கு ஏற்ப சுகாதாரம், கல்வி, சுற்றுசூழல் சார்ந்த திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து செயல்படுவோம். தொலைதூர பாமர மக்களுக்கு தரமான மருத்துவ வசதி செய்ய வழிவகை செய்யும் திட்டங்கள் முன்னெடுத்து செயல்படுத்தப்படும்.

ஆரோக்கியமான சுற்றுசூழலை ஏற்படுத்துகின்ற வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்றார்.

புதிய நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்ச்சியை கிரித்தீஷ், கீதாஞ்சலி ஆகியோர் சிறப்பாக தொகுத்து வழங்கினர்.

# கடந்த 10 ஆண்டுகால அதிமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட நல்ல திட்டங்களை விளக்கி துண்டு பிரசுரங்கள்

## முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி வழங்கினார்



**நாமக்கல்,ஜூலை.15-**

அதிமுக பொதுச் செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடியாரின் ஆணைக்கிணங்க, கடந்த 10 ஆண்டுகால அதிமுக ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட நல்ல திட்டங்களை விளக்கியும், கடந்த நான்காண்டு கால தி.மு.க அரசின் அவல நிலைகள், சட்டம் ஒழுங்கு சீர்கேடு, போதை பொருட்கள் விற்பனை, பெண்களுக்கு பாதுகாப்பின்மை ஆகியவைகளை விளக்கியும், துண்டு பிரசுரங்களை நாமக்கல் மாவட்ட அம்மா பேரவை சார்பில் நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி, ராசிபுரம் ஒன்றியம், ஆண்டகளூர்; கேட் பகுதி முழுவதும் வீடு வீடாகச் சென்று வினியோகித்து தெருமுனைப் பிரச்சாரம் நடைபெற்றது. வழக்கறிஞரும், நாமக்கல் மாவட்ட அம்மா பேரவை செயலாளரும் இ.ஆர்.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளரும், நாமக்கல் மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.தங்கமணி கலந்து கொண்டு வீடு வீடாகச் சென்று துண்டு பிரசுரங்களை வழங்கினார். பின்னர் முன்னாள் அமைச்சர் பி.தங்கமணி பேசியதாவது கழகத்தின் சாதாரண கிளைக் கழக செயலாளராக இருந்து இன்றைய தினம் கழகம் பொதுச் செயலாளராக, தமிழகத்தின் சிறந்த முதலமைச்சராக பணியாற்றி, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கிணங்க, 22-வது வாரமாக ஒவ்வொரு பகுதியாகச் சென்று தெருமுனைப் பிரச்சாரமும், அதே போல் இந்த ஆட்சியில் மக்கள் விரோத ஆட்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் பத்து மாத காலத்தில் தேர்தல் நடைபெற இருக்கின்றது. தமிழகத்தில் மக்களின் ஆட்சியாக மக்கள் முதல்வராக மீண்டும் எடப்பாடியார் வர வேண்டும் என்பதற்காக தொடர்ந்து 52 வாரங்கள் துண்டு பிரசுரங்கள் வழங்குகின்ற நிகழ்வும், தெருமுனைப் பிரச்சாரமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் ஆண்டகளூர்கேட் பகுதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கூட்டம் என்பது நான்காண்டு காலம் அம்மா கொண்டு வந்த அனைத்து திட்டங்களையும் நிறுத்திய அரசு தான் திமுக அரசு. இது கிராமப் பகுதி 100 நாள் வேலை வாய்ப்பை நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 150 நாள் என்று சொன்னார்கள். 100 நாள் வேலை செய்தவர்களுக்கே 3மாத காலமாக பணம் வரவில்லை. அது மட்டுமல்ல கிராம ஊராட்சிகள் எல்லாம் நகராட்சியோடு இணைத்து இனிமேல் 100 நாள் வேலை வாய்ப்பு இல்லை. அதற்காக வருகின்ற புதன்கிழமை, ராசிபுரம் எம்ஜிஆர் சிலை அருகில் ஒரு போராட்டம் நடைபெற இருக்கின்றது. அண்ணன் எடப்பாடியார் அறிவித்திருக்கிறார்கள். 100நாள் வேலை வாய்ப்பு திட்டத்திற்கு உடனே பணம் வழங்க வேண்டும். கிராம ஊராட்சி கிராம ஊராட்சியாகவே இருக்க வேண்டும் புதிய பேருந்து நிலையம் அப்படியே வைத்திருக்க வேண்டும் அவர்களின் ஆதாயத்திற்காக அணைப்பாளையம் 8கிலோ மீட்டர் தள்ளி அந்த பேருந்து நிலையத்தை கொண்டு செல்ல இருக்கின்றார்கள். அதற்காக புதன்கிழமை நடைபெறும் அந்தப் போராட்டம் வெற்றி அடைய வேண்டும் என்றார்.

இப்பிரச்சாரத்தில் முன்னாள் அமைச்சர் மருத்துவர் வெ.சரோஜா, மாவட்ட அவைத் தலைவர் எஸ்.பி.கந்தசாமி, ராசிபுரம் ஒன்றிய செயலாளர் ஏ.வேம்புசேகர், மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணி செயலாளர் கே.பி.எஸ்.சுரேஷ்குமார், ராசிபுரம் நகர செயலாளர் எம்.பாலசுப்பிரமணியம், சேந்தமங்கலம் ஒன்றிய செயலாளர் ஜி.பி.ரமேஷ், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் பரணிதரன், மாவட்ட புரட்சித்தலைவி அம்மா பேரவை தலைவர் இ.குமரேசன், மாவட்ட வர்த்தக அணி இணைச் செயலாளர் ஆர்.பிரகாசம், ஐ.டி.விங் மாவட்ட துணைச் செயலாளர் என்.கே.தினகர், மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞர் அணி தலைவர் பி.முத்துசாமி உட்பட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சேலம் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது



**சேலம்,ஜூலை.15-**

சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் இரா.பிருந்தாதேவி, தலைமையில் (14.07.2025) நடைபெற்றது. பின்னர், கலெக்டர் தெரிவித்ததாவது:

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனுவின் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, பட்டா மாறுதல், சாதிச்சான்று, வேலைவாய்ப்பு, வங்கிக்கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, கல்வி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படைத் தேவைகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 395 மனுக்கள் வரப்பெற்றன.

மேலும், மாற்றுத்திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தின் தரைத் தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங்கள், பராமரிப்பு உதவித் தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து அளிக்கப்பட்ட 14 மனுக்களைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் இரா.பிருந்தாதேவி, தெரிவித்தார்.

இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி, சக்கர நாற்காலி, காதொலி கருவி, ஊன்றுகோல் என 8 நபர்களுக்கு ரூ.1.32 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை கலெக்டர் வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், உதவி கலெக்டர்(பயிற்சி) விவேக் யாதவ், தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) சு.ஜானகி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பி.செண்பகவல்லி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் என்.ஜெயக்குமார் உள்ளிட்ட அரசுத்துறை முதன்மை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# ராசிபுரத்தில் வரும் 16ம்தேதி மின் விநியோகம் நிறுத்தம்

**ராசிபுரம்,ஜூலை.15-**

ராசிபுரம் துணைமின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற இருப்பதால் 16.7.2025 புதன்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை ராசிபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் மின்விநியோகம் நிறுத்தப்பட உள்ளது. ராசிபுரம், முத்துக்காளிப்பட்டி, மசக்காளிப்பட்டி, புதுப்பாளையம், ப.மு.பாளையம், வடுகம், கவுண்டம்பாளையம், முருங்கப்பட்டி, போடிநாயக்கன்பட்டி, சிங்களாந்தபுரம், மோளப்பாளையம், அரசப்பாளையம், வேலம்பாளையம், வெள்ளாளப்பட்டி, பட்டணம், கூனவேலம்பட்டி புதூர், குருசாமிபாளையம், கதிராநல்லூர், நத்தமேடு, கண்ணூர்பட்டி ஆகிய இடங்களில் மின்விநியோகம் நிறுத்தப்பட உள்ளது என்பதை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், ராசிபுரம் செயற்பொறியாளர் ஆ.கே.சுந்தரராஜன் இச்செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# போச்சம்பள்ளி அருகே மாபெரும் வேலை வாய்ப்பு முகாம்



**கிருஷ்ணகிரி,ஜூலை.15-**

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்த காட்டாகரம் ஊராட்சி சார்பில் சந்தூரில் உள்ள புதிய ஊராட்சி மன்ற அலுவலகத்தில் மாபெரும் இலவச வேலை வாய்ப்பு முகாம் நடந்தது. இந்த முகாமில் ஓசூரில் இயங்கி வரும் பிரபலமான பன்னாட்டு மொபைல் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு தகுதி அடிப்படையில் ஆட்கள் தேர்வு செய்தனர். இதில் காட்டாகரம் ஊராட்சிக்கு உட்பட்ட கிராமங்களில் இருந்து 100 க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ரங்கநாதன் முகாமை துவக்கி வைத்தார். முகாமிற்கான ஏற்பாட்டுகளை ஊராட்சி செயலாளர் கஜேந்திரன் செய்திருந்தார். ஏராளமான படித்த இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்

# ஊத்தங்கரையில் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி



**கிருஷ்ணகிரி,ஜூலை.15-**

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தொடக்கப்பள்ளியில் உள்ள பகல் நேர பராமரிப்பு மையத்தில் படிக்கும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு தேவையான சுகாதாரப் பொருட்கள், கல்வி உபகரணங்கள், நிதியுதவி, இனிப்பு ஆகியவற்றை ஊத்தங்கரை மகளிர் மேல்நிலைப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் தேவராசன், சதீஷ்பாபு, ஆரவ் ஆகியோர் வழங்கி வாழ்த்தினார்கள். இந்நிகழ்ச்சியில் ஆடிட்டர் லோகநாதன், பசுமைத் தாயகம் கிருபாகரன், சுரேஷ், சாந்தமூர்த்தி, தி பன்ச் நியூஸ் நிருபர் பாலாஜி, உயிர்மெய் செய்திகள் நிருபர் ராஜ்குமார், தளபதி அரசு நிருபர் கண்ணதாஸ் மாற்றுத்திறனாளிகளின் சிறப்பு ஆசிரியர்கள் பாக்கியராஜ், மாதம்மாள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மாவட்ட மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

## கலெக்டர் ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது



**கிருஷ்ணகிரி,ஜூலை.15-**

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்;க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்ததாவது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வாரந்தோறும் திங்கட்கிழமை அன்று மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் (14.07.2025) நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம், வீட்டுமனைப் பட்டா, விலையில்லா தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, முதியோர் உதவித்தொகை, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, சாலை வசதி மற்றும் மின் இணைப்;பு போன்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து 416 மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் பெற்றுக் கொள்ளப் பட்ட மனுக்களில் தகுதியான மனுக்கள் மீது துறை சார்ந்த அலுவலர்கள் உடனடி நடவடிக்கை எடுக்கவும், தகுதியில்லாத மனுக்களுக்கு உரிய விளக்;கத்தினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கோபு, தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்) சா.தனஞ்செயன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் ந.சிவக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) தர்மராஜ் உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# நாமக்கல் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள்

## கலெக்டர் துர்காமூர்த்தி வழங்கினார்



**நாமக்கல்,ஜூலை.15-**

நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் (14.07.2025) கலெக்டர் துர்காமூர்த்தி, தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கல்வி உதவித் தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, வங்கி கடன் உதவி, குடிசை மாற்று வாரிய வீடு, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வேண்டி பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 640 மனுக்களை கலெக்டர் துர்காமூர்த்தி, இ.ஆ.ப., அவர்களிடம் பொதுமக்கள் வழங்கினார்கள். மனுக்களைப் பெற்று கொண்ட கலெக்டர் மனுக்களை பரிசீலினை செய்து உரிய அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்ன அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து, கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில், 28.05.2025 முதல் 18.06.2025 வரை தெரு நாய்கள் கடித்து பிண பரிசோதனை செய்யப்பட்ட கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்கும் வகையில், 14 கால்நடை வளர்போருக்கு ரூ.2.40 இழப்பீடு தொகையினை கலெக்டர் துர்காமூர்த்தி, வழங்கினார்.

இக் கூட் டத் தில், மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், மண்டல இணை இயக்குநர் (கால்நடை பராமரிப்புத்துறை) மரு.வீ.பழனிவேல், தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ச.பிரபாகரன், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

போக்குவரத்து விதிகளை மதிக்கவும்

**அசல் நிலம் / சொத்து ஆவணம் காணவில்லை**

சேலம் மாவட்டம், கெங்கவல்லி வட்டம், நாக்கியம்பட்டி, காட்டுக்கோட்டை என்ற முகவரியில் வசித்து வரும் ஜெயராமன் மகன் ஜே.சின்னய்யன் வயது 59 (ஆதார் எண்.4278 8646 6519) ஆகிய நான் இதன்மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில், கெங்கவல்லி சார்பதிவாளர் அலுவலகத்தில் எனது பெயருக்கு பதிவு செய்யப்பட்ட அசல் பத்திரம் எண்.87/BK1, கடந்த 11.04.2025-ம் தேதியன்று சேலத்திலுள்ள எனது வழக்கறிஞரிடம் வழக்கு சம்மந்தமாக பேசிவிட்டு செல்கையில் சேலம் மாநகர 3-ம் நெம்பர் பேருந்தில் தொலைந்துவிட்டது. அதை கண்டு எடுத்தவர்கள் மேற்கண்ட முகவரியில் அல்லது Cell No.96295 23230/ 94881 26087 என்ற செல்போனுக்கோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்பமை MOTOR ACCICENT CLAIMS TRIBUNAL நாமக்கல்**
**M.C.O.P.No. 1120/2024**

சரத்குமார் ...மனுதாரர்

இடையே

1. சாதிக்பாஷா, நெ.2/236, காந்தி நகர், போதுப்பட்டி, லக்கம்பாளையம், நல்லிபாளையம் அஞ்சல், நாமக்கல் - 637 003.
2. ரிலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், சேலம்.

...எதிர்மனுதாரர்கள்

1 ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு

கடந்த **27.05.2018** நாமக்கல் - மோகனூர் சாலை சீத்தப்பட்டி பஸ் ஸ்டாப் அருகே இருசக்கர வாகனத்தில் சென்றபோது 1-ம் எதிர்மனுதாரர் ஆன உங்களுக்கு சொந்தமான பதிவு எண். **TN-28-BC-8447** கொண்ட பல்சர் பைக் மோதி ஏற்பட்ட சாலை விபத்தில் கொடுங்காயம் அடைந்து விட்டார். மேற்படி விபத்திற்கு இழப்பீட்டுத் தொகை கோரி மேற்படி **MCOP No. 1120/2024** நெம்பரில் எதிர்மனுதாரர்கள் ஆகிய உங்கள் பேரிலும், இன்சூரன்ஸ் நிறுவனத்தின் பேரிலும் சமூகம் நீதிமன்றததில் வழக்குதாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி வழக்கில் வருகின்ற **11.08.2025** ம் தேதி 1 ம் எதிர்மனுதாரர் ஆகிய நீங்கள் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தேதியில் நீங்கள் நேரிலோ, வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி உங்கள் தரப்பு பதிலை அளிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்ப்பாகும் என்பதை கண்டிப்பாய் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/

T.P.சரவணன்,M.A.,B.L.,
வழக்கறிஞர்/நோட்டரி, நாமக்கல்.

உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி.
சி.ப. எண். **266 / 2025**

M.சத்தியப்பிரியா, D/O. மணி, க.எண். 49, எல்லை சந்து, எடப்பாடி கிராமம், எடப்பாடி அஞ்சல், எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.
.......... மனுதாரர்

/ எதிராக /

ஆணையாளர் அவர்கள், சேலம் மாநகராட்சி, சேலம் மாவட்டம்.
..... எதிர்மனுதார்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் தாயார் சாந்தி, க/பெ.மணி என்பவர் கடந்த 17-01-2016 அன்று சேலம் மணியனூர் சரவணபவ நகர், லிட்டில் ஹார்ட்ஸ் மனநல காப்பகம் என்ற முகவரியில் இறந்தார் என்பதை எதிர் மனுதாரிடம் பதிவு செய்யவில்லை. எனவே மேண்மை தாங்கிய நீதிமன்றத்தின் முன் மேற்படி மனுவை தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இம் மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் விளம்பர நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தனது ஆட்சேபனையை நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆட்சேபனையை தெரிவித்துக் -கொள்ளலாம் இல்லை எனில் மனு மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

// நீதிமன்ற உத்தரவு படி //

M. சத்தியப்பிரியா
மனுதாரர்.

மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம்/ சார் ஆட்சியர் அலுவலகம், மேட்டூர்
**இ.ப.சிப.எண் -556/2025/A**
**நாள்:1/7/2025**

C. மாதேஷ்
த/பெ. (லேட்) சின்னதம்பி
கருக்கல்வாடி கிராமம்
கோணகாபாடி அஞ்சல், ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம்-636502
செல் -7010623944
மனுதாரர்.

// எதிர் //

உயர்திரு சார் ஆட்சியர் அவர்கள்,
சார் ஆட்சியர் அலுவலகம், மேட்டூர்.
....எதிர் மனுதாரர்...

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் ஆகிய எனது தந்தை சின்னதம்பி என்பவர் கடந்த 7/04/1988-ஆம் தேதியில் கருக்கல்வாடி கிராமம், நரசுகாடு என்கின்ற எங்களது கிராமத்தில் உள்ள வீட்டில் இறந்து விட்டார். அவரது இறப்பு தற்போது பதிவு செய்யப்பட வில்லை. இந்நிலையில் பட்டா , வாரிசு சான்று மற்றும் இதர ஆவணங்கள் பெறுவதற்காக ஆகிய காரணத்திற்காக இறப்புச் சான்று தேவைப்படுவதால் மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்புச் சான்றிதழ் கோரி மேற்படி அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 7 தினங்களுக்குள் மேற்படி நடுவர் முன் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனைகள் தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்.
C. மாதேஷ் த/பெ. (லேட்) சின்னதம்பி
கருக்கல்வாடி கிராமம்
கோணகாபாடி அஞ்சல்,
ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம்-636502
செல் -7010623944

மாண்பமை உட்கோட்ட நிர்வாக நடுவர் நீதிமன்றம்/ சார் ஆட்சியர் அலுவலகம், மேட்டூர்
**இ.ப.சிப.எண் -557/2025/A**
**நாள்:1/7/2025**

C. மாதேஷ்
த/பெ. (லேட்) சின்னதம்பி
கருக்கல்வாடி கிராமம்
கோணகாபாடி அஞ்சல், ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம்-636502
செல் -7010623944
மனுதாரர்.

// எதிர் //

உயர்திரு சார் ஆட்சியர் அவர்கள்,
சார் ஆட்சியர் அலுவலகம், மேட்டூர்.
....எதிர் மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் ஆகிய எனது பாட்டி சின்னலமி(எ) சின்ன எளமி என்பவர் கடந்த 11/07/1977- ஆம் தேதியில் கருக்கல்வாடி கிராமம், நரசு காடு என்கின்ற எங்களது கிராமத்தில் உள்ள வீட்டில் இறந்து விட்டார். அவரது இறப்பு தற்போது பதிவு செய்யப்பட வில்லை. இந்நிலையில் பட்டா , வாரிசு சான்று மற்றும் இதர ஆவணங்கள் பெறுவதற்காக ஆகிய காரணத்திற்காக இறப்புச் சான்று தேவைப்படுவதால் மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்புச் சான்றிதழ் கோரி மேற்படி அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 7 தினங்களுக்குள் மேற்படி நடுவர் முன் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனைகள் தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்.
C. மாதேஷ் த/பெ. (லேட்) சின்னதம்பி
கருக்கல்வாடி கிராமம்
கோணகாபாடி அஞ்சல், ஓமலூர் வட்டம்,
சேலம் மாவட்டம்-636502
செல் -7010623944

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**ENROLLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three months thereafter, I, **I. HARSHINI, D/o. Iyyappan,** aged **22** years, Permanently residing at D.No. **30-A, Anichampalaiyam, Anichampalaiyam (Po), Paramathy Velur (Tk), Namakkal Dist - 638182, Tamil Nadu.** Intend having my enrollment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**I. HARSHINI**

**ENROLLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three months thereafter, I, **ANISHA .S, D/o. Shajahan,** Date of Birth: **11-04-2001,** aged 24 years, permanently residing at **D.No. 50/98, Avvaiyar Street, Mullaivadi, Pudupet (Po), Attur (Tk), Salem Dist. Tamil Nadu - 636 141.** Intend having my enrollment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**ANISHA S.**

**ENROLLMENT NOTICE**

After ten days of the publication of this notice and within Three months thereafter, I, **ROSHINI FATHIMA .S, D/o. M. Ahamed Shahjahan,** aged **22** years, permanently residing at **D.No. 35/12, Cholan West Street, Ammapet, Salem District, Tamil Nadu - 636 001.** Intend having my enrollment as an Advocate moved before the Bar Council of Tamil Nadu, Bar Council Buildings High Court Campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to the Bar Council within 10 days.

**ROSHINI FATHIMA .S**

சமூகம் முதன்மை சார்பு நீதிமன்றம், சேலம்.
**I.A.No. 1/2025 in I.P.No. 30/2023**

1. R.M.ஜுவல்லர்ஸ், அதன் உரிமையாளர் R.ரமேஷ்
2. R.ரமேஷ்

...மனுதாரர்கள்/ கடனாளிகள்

/Vs /

செந்தில், பெரியபுதூர், சேலம் மாநகரம், செல் எண் : 97986 30060
... 21ம் எதிர்மனுதாரர்

21 ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு

மனுதாரர்கள் சமூகம் கோர்ட்டில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மேற்படி I.P.No. 30/2023 என்ற மனு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கு வருகின்ற **19.07.2025** தேதியன்று 21 ம் எதிர்மனுதாரர் ஆகிய உங்களின் தோற்றத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே மேற்படி வாய்தா தேதியில் காலை 10.30 மணிக்கு சமூகம் கோர்ட்டில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி தங்களின் ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்படி மனு மீது உங்களுக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/

**M.AHAMED SHAHJAHAN, M.A.B.L.,**
வழக்கறிஞர்,சேலம்.

மாண்பமை முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாமக்கல்.
**அ.வ.எண். 163/2024**

1. சசிகுமார்
2. ராஜேஷ்

...வாதிகள்

/Vs /

தமிழக அரசு பை அதன் மாவட்ட ஆட்சியர், நாமக்கல் (வ)
... பிரதிவாதிகள்

அறிவிப்பு

மேற்படி அசல் வழக்கில் நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், எர்ணாபுரம் அஞ்சல், குடித்தெரு, க.எண்.1/40-1ல் வசிக்கும் சுப்பராயன் மனைவி பாப்புவிற்கு இந்த வாதிகளான சசிகுமார், ராஜேஷ் ஆகியோர் வாரிசுகள் என டிக்ளர் செய்ய கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் அதனை வருகின்ற **18.07.2025** -ம் தேதியில் காலை 10.00 மணிக்கு சமூகம் கோர்ட்டிற்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டியது தவறும்பட்சத்தில் ஒரு தலைபட்சமாக தீர்ப்பளிக்கப்படும் என்பதை இதன்மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/

K.பழனிசாமி,B.A.,B.L.,
வழக்கறிஞர்,நாமக்கல்.

உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், நாமக்கல்.
ந.க.எண்.**9166/2024/A5**

கொழந்தான், த/பெ. சின்னப்பவுண்டர், 3/47, மெயின் ரோடு, ஆண்டாபுரம் (கி), மோகனூர் வட்டம், நாமக்கல் வட்டம்.
...மனுதாரர்

/Vs /

1. திரு.கிராமநிர்வாக அலுவலர் அவர்கள், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர், ஆண்டாபுரம் கிராம நிர்வாக அலுவலர், மோகனூர் வட்டம், நாமக்கல் வட்டம்.
...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது உறவினர் கருப்பகவுண்டர் என்பவர் கடந்த **04.01.1990** ம் தேதியன்று நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், ஆண்டாபுரம் கிராமம் என்ற முகவரியில் இறந்ததை அறியாமை காரணமாக இறப்பு பதிவு செய்யவில்லை. தற்பொழுது இறப்பு சான்று வேண்டி எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவுவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபணைகள் இருந்தால் இவ்விளம்பரம் செய்த 30 தினங்களுக்குள்ளாக நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் எழுத்து மூலம் ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரருக்கு ஆதரவாக ஒருதலை பட்சமாக தீர்மாணிக்கப்படும் என்று இதன்மூலம்அறிவிக்கப்படுகிறது.

/கோட்டாட்சியர் உத்தரவுப்படி/

கொழந்தான், த/பெ. சின்னப்பவுண்டர்,,
மனுதாரர்,
3/47, மெயின் ரோடு, ஆண்டாபுரம் (கி)
மோகனூர் வட்டம், நாமக்கல் வட்டம்.

உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், நாமக்கல்.
ந.க.எண்.**2038/2025/A5**

பாப்பாத்தி, க/பெ. நல்லுசாமி, 10/63, கங்கநாய்க்கன்பட்டி, குமரிபாளையம் (கி), மோகனூர் வட்டம், நாமக்கல் வட்டம்.
...மனுதாரர்

/Vs /

1. திரு.கிராமநிர்வாக அலுவலர் அவர்கள், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர், குமரிபாளையம் கிராமநிர்வாக அலுவலர் மோகனூர் வட்டம், நாமக்கல் வட்டம்.
...எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் தனது உறவினர் குப்பபண்ணகவுண்டர் என்பவர் கடந்த **18.01.1984** ம் தேதியன்று நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், குமரிபாளையம் கிராமம் என்ற முகவரியில் இறந்ததை அறியாமை காரணமாக இறப்பு பதிவு செய்யவில்லை. தற்பொழுது இறப்பு சான்று வேண்டி எதிர்மனுதாரரின் அலுவலகத்தில் பதிவு செய்ய உத்தரவுவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளேன். இந்த மனு மீது எவருக்காவது ஆட்சேபணைகள் இருந்தால் இவ்விளம்பரம் செய்த 30 தினங்களுக்குள்ளாக நாமக்கல் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் எழுத்து மூலம் ஆட்சேபணைகளை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரருக்கு ஆதரவாக ஒருதலை பட்சமாக தீர்மாணிக்கப்படும் என்று இதன்மூலம்அறிவிக்கப்படுகிறது.

/கோட்டாட்சியர் உத்தரவுப்படி/

பாப்பாத்தி, க/பெ. நல்லுசாமி, மனுதாரர்,
குமரிபாளையம் (கி),
மோகனூர் வட்டம், நாமக்கல் வட்டம்.

